# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 08.05.2026

முன்னிலை

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

1. **வழக்கு எண். SA 2003/B/2024**
2. **வழக்கு எண். SA 2004/B/2024**
3. **வழக்கு எண். SA 2005/B/2024**
4. **வழக்கு எண். SA 2103/B/2024**

முனைவர்.மா.தனசேகரன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ — பொது அதிகார அமைப்பு
முதல்வர்,
நா.ம.ச.ச வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி,
நாகமலை,
மதுரை மாவட்டம் - 19.

## ஆணை

1. இவ்வழக்குகளின் மீது இவ்வாணையத்தில் இன்று (08.05.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் முனைவர்.மா.தனசேகரன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக முனைவர்.S.P.சரவணன், உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை, நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, நாகமலை, மதுரை மாவட்டம் அவர்கள் உரிய அங்கீகார கடிதத்தை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்து ஆஜரானார்.

2. மனுதாரரின் வழக்குகள் எண். SA 2003/B/2024, SA 2004/B/2024, SA 2005/B/2024, SA 2103/B/2024 ஆகிய நான்கு வழக்குகளும் ஒரே பொது அதிகார அமைப்பு சார்ந்தது என்பதால், இந்நான்கு வழக்குகளையும் ஒருசேர விசாரணை செய்ய இவ்வாணையம் தீர்மானித்து, இவ்வழக்குகள் இன்று (08.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

### 1. வழக்கு எண். SA 2003/B/2024:

மனுதாரர் 18.02.2024 தேதியன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பரிவு 19(3)-இன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீடு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (08.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர்

03.10.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-இன் கீழ், 29.06.2023 தேதியிட்ட நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி நிர்வாகத்தினரால் கல்லூரியின் கணிதத்துறை இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் திரு.M.தனசேகரன் மீது நடத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை விசாரணையின்போது நிர்வாகத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் விவரத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ள ExM.1 முதல் ExM.57 வரை உள்ள அனைத்து ஆவணங்களின் நகல்களையும் சான்றொப்பமிட்டு தகவலாக வழங்க கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 25.11.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-இன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டு மனு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

**2. வழக்கு எண். SA 2004/B/2024:**

மனுதாரர் 18.02.2024 தேதியன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பரிவு 19(3)-இன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீடு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (08.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 03.10.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-இன் கீழ், நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் தன்னாட்சி கல்லூரியில் நடைபெற்ற 20, 21, 22 மற்றும் 23 ஆகிய நாக்கு கல்விக்குழு கூட்டங்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கைகளின் நகல்கள் (ம) கூட்ட நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை தகவலாக வழங்க கோரி மொத்தம் 3 இனங்களில் தாக்கல் செய்த மனு மற்றும் 25.11.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-இன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டு மனு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

**3. வழக்கு எண். SA 2005/B/2024:**

மனுதாரர் 18.02.2024 தேதியன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பரிவு 19(3)-இன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீடு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (08.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 03.10.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-இன் கீழ், 29.06.2023 தேதியிட்ட நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி நிர்வாகத்தினரால் கல்லூரியின் கணிதத்துறை இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் திரு.M.தனசேகரன் மீது நடத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை விசாரயின்போது நிர்வாகத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் விவரத்தில் குறிப்பிட்டப்பட்டுள்ள 1)ExM.28, 2)ExM.29, 3)ExM.31, 4)ExM.33 முதல் 16)ExM.53 வரை ஒவ்வொன்றிலும் குறிப்பிட்டுள்ள பாடத்திட்டத்தின் பெயரினை எழுதி சான்றொப்பமிட்டு தகவலாக வழங்க கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 25.11.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-இன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டு மனு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

**4. வழக்கு எண். SA 2103/B/2024:**

மனுதாரர் 19.02.2024 தேதியன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பரிவு 19(3)-இன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீடு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (08.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 08.10.2023 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-இன் கீழ், அரசு உதவி பெறும் நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் 2019-2020, 2020-2021 (ம) 2021-2022-ஆம் கல்வியாண்டுகளில், கல்லூயின் பொறுப்பு முதல்வர்களாக செயல்பட்டவர்களின் பெயர், காலம், கல்வித்தகுதி, கல்லூரி ஆசிரியர்களின் பணிமூப்பின் அடிப்படையில் அவர்களது வரிசை எண் உள்ளிட்டவற்றை தகவலாக வழங்க கோரி மொத்தம் 2 இனங்களில் தாக்கல் செய்த மனு மற்றும் 25.11.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-இன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டு மனு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது சட்டப்பிரிவு 6(1) மனுக்களுக்கும், மேல்முறையீட்டு மனுக்களுக்கும், இவ்வாணையத்தில் தாக்கல் செய்து இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களுக்கும், அவற்றுக்கு தகவல் வழங்க தெரிவித்து இவ்வாணையத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதத்திற்கும் (Priliminary Notice) பொதுத் தகவல் அலுவலரால் இன்றுவரை தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து, பொதுத் தகவல் அலுவலர் மீது அபராதம் விதித்து, துறை ரீதியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார். மேலும், தனது சட்டப்பிரிவு 6(1) மனுக்களுக்கு உரிய காலத்திற்குள் தகவல்கள் வழங்காமல் தான் கோரிய தகவல்களுக்கு கட்டணம் செலுத்த கூறுவதாகவும் தெரிவித்தார்.

4. இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலர் சார்பாக ஆஜரான பிரதிநிதி, மனுதாரரது 03.10.2023 தேதியட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவானது (வழக்கு எண்.SA 2003/B/2024) 06.10.2023-இல் தங்கள் கல்லூரிக்கு கிடைக்கப்பெற்றது என்றும், அவர் கோரும் தகவல்களுக்கு உண்டான கட்டணத்தை செலுத்தி வரைவேலையான அனுப்பி வைக்குமாறு 18.12.2023 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது என்றும், ஆனால், மேற்படி கடிதத்தின் அடிப்படையில் மனுதாரரிடமிருந்து எவ்வித வரைவோலையும் கிடைக்கப் பெறாததால் தகவல்கள் அனுப்பப்படவில்லை என்றும், எனவே, இவ்வாணையம் அனுமதியளிக்கும்பட்சத்தில் மனுதாரரான் 03.10.2023 மற்றும் 08.10.2023-ஆம் தேதியிட்ட கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை வழங்கிட தயாராக உள்ளதாகவும் தெரிவித்து, 07.05.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலர் / முதல்வர், நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி அவர்களின் அறிக்கையையும், 07.05.2026 தேதியிட்ட கடிதத்துடன் இணைக்கப்பட்ட மனுதாரர் கோரிய தகவல்களையும் இவ்வாணையத்தின் முன்பு சமர்பித்தார்.

5. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1) மனுக்களுக்கு பொதுத் தகவல் அலுவலரால் இவ்வாணையத்தின் முன்பு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களே போதுமானதாக இவ்வாணையம் கருதுகிறது. மேலும், மனுதாரரின் வழக்கு எண்.SA 2003/B/2024-இன் 03.10.2023 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனுவானது 06.10.2023 அன்று பொது அதிகார அமைப்பால் பெறப்பட்டுள்ளது, ஆனால், மனு பெறப்பட்ட 30 நாட்களுக்குள் தகவல்கள் வழங்கப்படாமல் காலதாமதமாக 18.12.2023 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரர் கோரும் தகவல்களுக்கான கட்டணமாக மொத்தம் ரூ.322/- (ரூபாய் முந்நூற்று இருபத்து இரண்டு மட்டும்)-யை வரைவேலையாக அனுப்பி வைக்க கோரி மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் அறியமுடிகிறது. மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்காததால் அவர் கோரிய தகவல்களை பொதுத் தகவல் அலுவலர், தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 7(6)-இன் கீழ் கட்டணமின்றி வழங்கி இருக்க வேண்டும். அனால் அவ்வாறு இல்லாமல், காலம் கடந்தபின்பு மனுதாரரை கட்டணம் செலுத்த கோரியதை இவ்வாணையம் ஏற்க மறுக்கிறது. மேலும், மனுதாரரின் மற்ற வழக்குகள் எண். SA 2004/B/2024, SA 2005/B/2024, SA 2103/B/2024-களின் 03.10.2023 (ம) 08.10.2023 ஆகிய தேதியிடப்பட்ட சட்டப்பிரிவு 6(1) மனுக்களுக்கு, 07.05.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்கள் காலதாமதமாக தயாரிக்கப்பட்டு பொதுத் தகவல் அலுவலரால் இவ்வாணையத்தின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டது. இவற்றை இவ்வாணையம் பதிவு செய்கிறது.

6. மேலும், பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரரின் வழக்குகள் எண். SA 2003/B/2024, SA 2004/B/2024, SA 2005/B/2024, SA 2103/B/2024-க்கு 07.05.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக இவ்வாணையத்தின் முன்பு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி மனுதாரருக்கு நேரில் வழங்கியபோது, அவற்றில் முறையாக பொதுத் தகவல் அலுவலர் சான்றொப்பமிடவில்லை என்று தெரிவித்து அவற்றை பெற்றுக்கொள்ள மறுத்து, தகவல்களை முறையாக சான்றொப்பமிட்டு தனக்கு பதிவு

தபாலில் வழங்கும்படி பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட இவ்வாணையத்தை கேட்டுக்கொண்டார். இதனை இவ்வாணையம் ஏற்கிறது.

7. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1) மனுக்களுக்கு காலதாமதமாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்து அதன் அடிப்படையிலும், மேற்படி மனுதாரர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும், கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

1. ***இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 நாட்களுக்குள், இயக்குநர், அரசு கல்லூரி கல்வி இயக்ககம் அவர்கள் சம்மந்தப்பட்ட அன்றைய பொதுத் தகவல் அலுவலர் / முதல்வர், நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பி, நேரில் வரவழைத்து ஏன் உரிய காலத்திற்குள் மனுதாரரின் மனுவிற்கு தகவல்கள் வழங்கவில்லை என்று விசாரணை மேற்கொண்டு, வீணாக கால தாமதத்தை ஏற்படுத்திய அன்றயை பொதுத் தகவல் அலுவலர் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)-இன் கீழ் ஏன் அதிகபட்ச அபராதமாக ரூ.25,000/- விதிக்கக் கூடாது என்பதற்கும், சட்டப்பிரிவு 20(2)-இன் கீழ் ஏன் அவர் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்ககூடாது என்பதற்கும், சட்டப்பிரிவு 19(8)(b)-இன் கீழ் ஏன் இழப்பீடு விதிக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை பெற்று ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு 05.06.2026 அன்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் / முதல்வர், நா.ம.ச.ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை அவர்கள் மூலம் நேரடியாக சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***
2. ***இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒருவார காலத்திற்குள், மனுதாரரின் 03.10.2023 (ம) தேதியிட்ட மூன்று சட்டப்பிரிவு 6(1) மனுக்கள் 08.10.2023 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1) மனு ஆகிய நான்கு மனுக்களுக்கு 07.05.2026 தேதியிட்டு இவ்வாணையத்தின் முன்பு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை சட்டப்பிரிவு 7(6)-இன் கட்டணமின்றி, முறையாக "தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தகவல்" என்று முத்திரையிட்டு சான்றொப்பமிட்டு, ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் மனுதாருக்கு அனுப்பி, அதன் நகலையும், மனுதாரர் தகவல்களை பெற்றுக்கொண்டதற்கான பதிவு தபால் ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் 05.06.2026 அன்று நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.***
3. ***மேற்படி இவ்வாணையத்தின் உத்தரவு 2-இன்படி தகவல் வழங்க தவறும்பட்சத்தில் முன்னாள்/இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.25,000/- அபராதம் விதிக்கவும், சட்டப்பிரிவு 20(2)-ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் 19(8)(b)-ன்படி மேல்முறையீட்டு இழப்பீடு வழங்குதல் போன்ற தண்டனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கவும் நேரிடும் என்று பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகிறது.***

ஒம்/-ரா.பிரியகுமார்
மாநிலத் தகவல் ஆணையர்

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>1.வழக்கு எண். SA 2003/B/2024</u>**
**<u>2.வழக்கு எண். SA 2004/B/2024</u>**
**<u>3.வழக்கு எண். SA 2005/B/2024</u>**
**<u>4.வழக்கு எண். SA 2103/B/2024</u>**

**<u>பெறுநர்</u>**
இயக்குநர்,
அரசு கல்லூரி கல்வி இயக்ககம்,
சைதாப்பேட்டை,
சென்னை - 600015.

**<u>பொது அதிகார அமைப்பு:</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
முதல்வர்,
நா.ம.ச.ச வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி,
நாகமலை,
மதுரை மாவட்டம் - 19.

**<u>மனுதாரர்:</u>**
முனைவர்.மா.தனசேகரன்,
4/69-1, எல்.ஜி.நகர், கரடிப்பட்டி,
நாகமலைபுதுக்கோட்டை,
மதுரை மாவட்டம் - 19.

Copy to: File
AK/PC